முறியடித்தன. இந்த முறியடிப்புச் சமரில் கிளாலியில் இருந்து நகர்ந்த கொமாண்டோ படைகளையும் கண்டல் கடலேரிப்பகுதி ஊடாக நகர்ந்த 55 ஆம் டிவிசனின் ஒரு பகுதி படைகளையும் சோதியா படையணி எதிர்கொண்டு பலத்த தாக்குதல்களை நடத்தியது.

இப்படையணியினர் எதிரிக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தினர். கண்டல் கடலேரி ஊடாக நகர்ந்த படைகளை எதிர் கொண்ட தாக்குதலில் படை தரப்புக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய சோதியாப்படையணியின் லெப்ரினன் கேணல் சுதந்திரா உட்பட பலர் உயிரிழந்துள்ளனர்.

கண்டிவீதியுடன் மேற்கு பகுதியில் நகர்ந்த 55 ஆம் டிவிசன் இராணுவத்தின் மீது தற்காப்பு மற்றும் முறியடிப்பு சமரை சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி நடத்தியது. கண்டிவீதி அருகுப் பகுதியில் நகர்ந்த படைகளுக்கு எதிராக மாலதி படையினர் தீரமிகு தாக்குதலை நடத்தினர்.

கிளாலியை அடுத்த கரையோரமாக நகர்ந்து முன்னேறிய 53 ஆம் டிவிசன் படைகளுக்கு எதிராக எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எதிர்கொண்டு எதிரிக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். 8 கிலோமீற்றர் முன்னணி சமர்க்களப்பகுதி லெப்ரினன் கேணல் கோகுலன், லெப்ரினன் கேணல் துர்கா, லெப்ரினன் கேணல் வீரமதி, லெப்ரினன் கேணல் லோறன்ஸ், லெப்ரினன் கேணல் சுதந்திரா ஆகியோராலும் வழிநடத்தப்பட்டது. மாலதி படையணியை அதன் சிறப்புத் தளபதி விதுசா நெறிப்படுத்தினார்.

எல்லைப்படை சிறப்பு எல்லைப்படை என்பவற்றை கட்டா வழிப்படுத்தினார் என சமர் முறியை ஒருங்கிணைப்புச் செய்த கேணல் தீபன் தெரிவித்தார்.

முன்னணி முனைகளுக்கு அடுத்த கட்ட முனையை தளபதி கேணல் பால்ராஜ் நெறிப்படுத்தினார். எதிரிக்கு எதிரான துல்லியமான பீரங்கித் தாக்குதல்களைக் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி சிறப்பு தளபதி கேணல் பானு நெறிப்படுத்தினார்.

கடற்படையினருக்கு எதிரான தாக்குதல்களை தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகள் அணி நடத்தியது. களமுனையில் இருக்கின்ற பலத்தைக் கொண்டு எதிரியை ஆனையிறவு பெருங்களவுப் படை நடவடிக்கையான தீச்சுவாலையை உடைத்து அழித்தோம் என தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிக்கு முக்கியமான காரணம் எமது தலைவர் அவர்களின் சிறந்த திட்டமிடலும் அந்த திட்டத்திற்கு அமைய இந்த சமரில் போராளிகள் பொறுப்பாளர்கள் தளபதிகள் ஆகியோரின் செயற்பாடுகள் சரியாக அமைந்திருந்ததே ஆகுமென தீச்சுவாலை முறியடிப்பை எதிரிக்கு எதிரான துல்லியமான சூடுகளை வழங்கிய பீரங்கிப்படைப் பிரிவுகளை நெறிப்படுத்திய கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

பதினையாயிரம் படையினரையும் கடல் வான் படைகளையும் சிறிலங்கா இராணு